பாசுரம் - 16

நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய
கோயில் காப்பானே! கொடித் தோன்றும் தோரண*
வாசல் காப்பானே! மணிக்கதவம் தாள் திறவாய்!*
ஆயர் சிறுமியரோமுக்கு/ அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய் நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயில் எழப் பாடுவான்
வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே அம்மா நீ*
நேச நிலைக்கதவம் நீக்கேல் ஓர் எம் பாவாய்

16-1 முதல் ஐந்து பாட்டாலே தத்வ ஹித புருஷார்த்தங்களை சொல்லி பின் கீழ் பத்தாலே பகவதனுபவத்திற்கு துணையாக ஆயர்பாடி சிறுமிகளை எழுப்பியது. இவரை தனித்தனியாக சிலரை எழுப்பியது தோழிகள் அனைவரையும் விழிக்கச் சொன்னதாயிற்றாம்.

16-2 10 பெண்களை எழுப்புவது 10 ஆழ்வார்களையும் காட்டியது. 10 ப்ரபன்னர்களை பகவத் அனுப்வத்திற்கு அழைப்பதாகவும் கொள்ளலாம்.

16-3 இனி பெண்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து கண்ணனை எழுப்ப வேண்டி நந்தகோபனின் திருமணிமாமணி மண்டபத்திற்கு சென்றனர். முதலில் வாசல் காப்போன், பிறகு நந்தகோபன், யசோதை, பலராமன், நப்பின்னை என்று இவரை முன்னிட்டு கண்ணனை எழுப்பினர் மேல் பாசுரங்களில்.

16-4 எதற்கு தோழிகளை எழுப்பணும் எனில் *நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்* என்று முதல் பாசுரத்திலேயே பகவத் குணங்களை அனுபவிக்க தனியாக செல்லாது எல்லோரையும் அழைத்து கூடிச் செல்வதைக் காட்டினாள்.

16-5 *செய்யாதன செய்யோம்* என்று இரண்டாம் பாட்டிலே சொன்னதை அனுஷ்டித்து காட்டுகிறாள் இங்கே. செய்யாதன என்னவெனில் அடியோரோடு சேராது எம்பெருமானை தனியே அனுபவிக்க மாட்டோம்.

வேதம் வல்லார்களை கொண்டு விண்ணோர் பெருமான் திருப் பாதம் பணிந்து

திருவாய்மொழி 4-6-8

ப்ரபத்தியின் போது சொன்ன ப்ராதிகூல்ய வர்ஜனத்தை கடைபிடிக்கிறாள்.

16-6 *பாகவதரை முன்னிடாமல் பகவத் விஷயத்தைப் பற்ற மாட்டோம்*. எனும் பெருங்கருத்தை அறியாத ஆயர்பாடி சிறுமிகள் ஆயினும் வைணவ குடிப்பெண்கள் ஆனதாலே இந்த அனுஷ்டானம் அவர்களுக்கு இயற்கை.

16-7 இது ஏட்டை படித்து அறியாவிட்டாலும், சேஷ்டை கண்டு தெரிவது. *"மேலையார் செய்வனகள்"*. இங்கனே பாகவதரை முன்னிடாமல் எம்பெருமானை அணுகுவோர் சூர்ப்பணகையின் கதி அடைவர்.

16-8 *யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்*
யோவை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை
தம் ஹி தேவ ஆத்ம புத்திர் ப்ரகாசம்
முமூக்ஷுர்வை ஸரணம் அஹம் ப்ரபத்யே

- ச்வேதாஸ்வர உபனிஷத்

எவன் பிரமனை படைத்து வேதங்களை புகட்டினானோ அந்த தேவனை, ஆத்ம ஞானம் அளிப்பவனை நான் சரணம் அடைகிறேன் என்றது வேதம். அது மறை. அதனால் பற்றும் முறையை மறைத்து பேசியது.

16-9 *நிவேதயதமாம் க்ஷிப்ரம்*

ராமாயணம்

"நான் வந்திருப்பதை ராமனிடம் தெரிவிக்கவும்" என்று ராமனின் பரிவாரங்களிடம் வேண்டினான் விபிஷணன் முதலில். ராமாயணம் பற்றும் முறையை வெளிப்படையாய் காட்டியது.

16-10 *வில்லிபுத்தூர் விட்டுசித்தர் தங்கள் தேவரை*
வல்ல பரிசு வருவிப்பரேல் அது காண்டுமே

நாச்சியார் திருமொழி 10-10

ஆசாரியரான பட்டர்பிரான் எம்பெருமானை ஏதாவது வழியில் வரவழைப்பாரானால் அங்கு அந்த பெருமானை ஸேவிப்போம். ஆசாரியனை முன்னிட்டே பகவானின் உறவை காட்டினாள்.

16-11 *நாயகனாய் நின்ற* என்பதில் நாயகன் யார்? மூவரைச் சொல்லும். வாசல் காப்போன் நாயகன். திருமாளிகையின் சொந்தக்காரன் நந்தகோபன் நாயகன். ஸகலஜீவன்களுக்கும் இறைவனாய் இருக்கும் கண்ணனே நாயகன்.

16-12 *நாயகனாய் நின்ற* பகவான் திருக்கோயிலுக்கு செல்லுங்கால் அக்கோயில் முன் உள்ள துவாரபாலகர்களை வணங்கி அனுமதி பெற வேண்டும் என்றது பாஞ்சராத்ர சாஸ்திரமும். அதனால் வாயிற்காப்போன் நாயகன்.

16-13 *நாயகனாய் நின்ற* வாயிற்காப்போன் நாயகனோ என்னில், பகவானையே காட்டிக் கொடுப்பதால் அவனைவிட பாகவதர் உயர்ந்தவர் அன்றோ? உயர்ந்த பொருளைக் காட்டிலும் அதனை காட்டிக் கொடுத்தவனை புகழ்வது மரபு.

வேறாக ஏத்தி இருப்பாரை வெல்லுமே
மற்றவரை சாத்தி இருப்பார் தவம்
--திருமழிசையாழ்வார், நான்முகன் திருவந்தாதி -18,

16-14 காவல் செய்ய இடங்கள் பல இருக்கேயும், பகவான் பள்ளி அறை வாசலிலே கிடந்து சேவை செய்யும் வாயிற்காப்பானோ, உம் பாக்கியம்தான் என்னே!

ஸத3ா பஶ்யந்தி ஸூரய:,
- விஷ்ணு ஸூக்தம்
சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்
- முதல் திருவந்தாதி -53
என்கிறாற்போலே

16-15 *ஸத்ய வ்ரதம், ஸத்ய பரம், த்ரிஸத்யம்*
ஸத்யாத்மகம் த்வாம் ஸரணம் ப்ரபந்நா:
என்று ப்ரம்ம ருத்ராதிகள், தேவர்கள் ஸ்தோத்திரம் செய்து வணங்கியது கோயிலுக்குள் உறங்கும் நந்தகோபன் எனும் கிருஷ்ணன், தேவிகியின் கர்ப்பத்தில் இருக்கும்போதே அன்றோ. இவனே ஸர்வ வஸ்துக்களுக்கும் ஈச்வரன். இவன்தான் *நாயகன்*. வத்ஸாபஹாகாரத்தில்லும், பாணாசுர யுத்தத்திலும் பிரமன், சிவனுடைய கதியைக் கண்டால் இது விளங்கும்.

16-16 *பஶ்யாமி தே3வாந் தவ தே3வ தே3ஹே*
ஸர்வாம்ஸ்தத2ா பூ4த விஶேஷ ஸங்க4ாந் |

ப்₃ரஹ்மாணம் ஈஶம் கமல ஆஸநஸ்த₂ம்
ருஷீம்ஸ் ச ஸர்வாந் உரக₃ாரம்ஶ்ச தி₃வ்யாந் ||
- பகவத் கீதை 11-15

என்று அருச்சுனன் எல்லா தேவரையும், ப்ரம்மாவையும் எல்லா பிராணி வர்க்கங்களையும், ரிஷிகளையும், தெய்வ ஸர்ப்பங்களையும் கண்ணனின் திருமேனியில் கண்டதாலே அவனே எல்லோருக்கும் நாயகன்

16-17 *கொடித்தோன்றும் தோரண வாயில்* என்பதாலே அண்டி வருவரை காப்பதற்கே சித்தமாயுள்ளேன் என்பதை உணர்த்த கருடன் கொடி கட்டி தன் இடத்தை காட்டினான்

வேண்டி வணங்கித் தொழும் கார்வண்ணன் நீயே
தோண்டித் தள்ளும்முன் நீண்டு உயர்ந்த நெடுமாலே!
அண்டி வருவதற்கே அமர்ந்த பாடக அருளாளனே!
பாண்டவ தூதனே! உன்னைப் பல்லாண்டு பாடுவனே
- தேஸத்தின் வாஸம்

என்று திருப்பாடகத்தில் ஸேவை ஸாதிக்கும் பாண்டவதூதன் என்னும் எம்பெருமானை சொன்னது.

16-18 *மணிக்கதவம் தாள் திறவாய்*! கிருஷ்ணன் பள்ளியிருக்கும் கோயிலை காக்கும் வாசல் காப்போனே! நவரத்தினங்களாலும் தங்கத்தினாலும் இழைத்து இருக்கும் அக்கதவின் தாழ்ப்பாளை நீக்கி திறந்து எம்மை உள்ளே அனுமதிக்க மாட்டீரோ!

16-19 *ஆயர் சிறுமியோர் எமக்கு* வேதமும் சாஸ்திரமும் அறியாத சிறு பெண்களான எங்களின் குற்றம், குறைகளை பொறுத்து எமக்கு *மணிக்கதவம் தாள் திறவாய்*

16-20 *உன்னித்து மற்று ஒரு தெய்வம் தொழாள் அவனை அல்லால்*
நும்மிச்சை சொல்லி நும் தோள்குலைக்கப்படும் அன்னைமீர்!
திருவாய்மொழி 4-6-10

என்று கண்ணன் அன்றி வேறு ஒன்றையும் அறியாது அவனது கடாக்ஷமே வேண்டி வந்திருக்கும் சிறுமியர் நாங்கள்.

16-21 *நென்னலே வாய் நேர்ந்தான்* கண்ணன் எங்களை வாரும் என்று நேற்றைக்கே அழைத்து சொன்னதால், அவன் சொல் கேட்டு இப்போது நாங்கள் வந்திருப்பதை தடுக்காதீர். தொடக்கத்திலேயே துயரத்தை தராதீர்.

16-22 *தூயோமாய் வந்தோம் துயில் எழப் பாடுவான்* கண்ணனை தூக்கத்திலிருந்து விழிப்புறச் செய்யவேண்டி திருப்பள்ளி எழுச்சி பாட, முதலில் நல்ல தீர்த்ததில் நீராடி பரிசுத்தமாய் வந்துள்ளோம். பாவ சுத்தியுடன் தேஹ சுத்தி.

16-23 *நீ வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே* கண்ணன் திருமாளிகைக்கு முன் உள்ள உம்மை அண்டி வேண்டும்போது எங்கள் வேண்டுகோளை நீரே மறுக்காதீர்!

16-24 *நேய நிலைக்கதவம் நீக்கு* என்று நிலையோடு சேர்ந்திருக்கும் அந்த கதவின் தாழ்ப்பாளை நீக்கு என்று வேண்டினர். வாயிற்காப்போனிடம் தமக்கு கதவைத் திறக்க சக்தியில்லை நீரே கதவைத் திறந்து எமக்கு பகவத் ஸேவையை செய்து வைக்கவும் என்பது ப்ரபத்தியை ஆசார்யனின் திருவடிகளில் விண்ணப்பிப்பத்து வேண்டி நிற்பது.

16-25 கண்ணன் எழுந்தருளியிருக்கும் கோயில் உள்ளே அடியவர் தவிர ஏனைய அசுத்தங்கள் உள் செல்லாது காக்கும் கடைமையைச் செய்யும் *கோயில் காப்பானே*. இப்படி, கூடி வந்த தோழிகள் எல்லோரும் கண்ணனது ஸேவையை வேண்டி முதலில் வாசல் காப்பானிடம் வேண்டினர்.

இதுவரை அந்யாபதேஸமான *வாக்கியார்த்தம்*. இனி ஸ்வாபதேஸம் என்னும் ப்ரபத்தி விஷயமான ப்ராதானமான *உள்ளர்த்தம்*.

16-26 *நாயகனாய் நின்ற* என்பதால் எல்லோரின் இந்திரியங்களை அடக்கி ஆளும் எம்பெருமான் ஹிருஷிகேசனைச் சொன்னது. ஹிருஷிகங்களுக்கு எல்லாம் ஈசன். சேதனனின் இந்திரியங்களை அடக்கி தனக்கு அடிமையாக்கி சேதனனை நல்வழிப்படுத்தும் ஈச்வரன் இவனே *நாயகன்*.

16-27 *இருடீகேசன் எம்பிரான் இலங்கையர் அரக்கர் குலம்*
முருடு தீர்த்த பிரான் எம்மான் அமரர் பெம்மான் என்று என்று
- *திருவாய்மொழி 2-7-10*

“ஏ சேதனனே! பகவான் உனக்கு எதற்காக இந்த இந்திரியங்களை எல்லாம் கொடுத்து இருக்கிறார் என்று நினைச்சுப்பார்! அல்பமான உலக விஷயங்களை தவிர்த்து அரும்பொருளான

அவனுக்கு கைங்கர்யம் செய்து அனுபவித்து மகிழ்வதற்கே" இந்திரியங்களின் முரட்டுத் தன்மை நீங்க அவனிடம் வேண்டுவாய்

16-28 ஏகோஹ வை நாராயண ஆஸீத் |
ந ப்3ரஹ்மா ந ஈஶான: ||
ந மே த்யாவா ப்ருத்வீ ந நக்ஷத்ராணி
மஹோபனிஷத்
ஒன்றும் தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதும் இல்லா அன்று
நான்முகன் தன்னோடு தேவர் உலகோடு உயிர் படைத்தான்
திருவாய்மொழி 4-10-1

ப்ரளய காலத்தில் எம்பெருமான் ஒருவனே எல்லாவற்றையும் ஸூக்ஷமமாய் அடக்கி ஒடுக்கி தன்னுள் வைத்துக் கிடந்தான். தன் கருணையாலே ஸ்ருஷ்டியைச் செய்கிறான்.

ஹர்த்தும் தமஸ் ஸத3ஸதீ ச விவேக்தும் ஈஶோ
மாநம் ப்ரதீ3பம் இவ காருணிகோ த3த3ாதி |
- பராசர பட்டர், ரங்கராஜஸ்தவம் 2-1

அஞ்ஞானம் என்னும் இருள் விலக, நல்லவை தீயவை என்பதை ஆய்ந்து அறிய கருணாநிதியான எம்பெருமான் வேதமாகிய நல்விளக்கை அளித்தான்.

16-29 ஓம் அத2 புருஷோ ஹ வை நாராயணோSகாமயத ப்ரஜா: ஸ்ருஜேயதி|
நாராயணாத் ப்ராணோ ஜாயதே !
மந: ஸர்வேந்த்3ரியாணி ச |
க2ம் வாயுர் ஜ்யோதிர் ஆப: ப்ருதி2வீ விஶ்வஸ்ய த4ாரிணீ |
நாராயணாத்3 ப்ரஹ்மா ஜாயதே |
நாராயணாத்3 ருத்3ரோ ஜாயதே |
நாராயணாத்3 இந்த்ரோ ஜாயதே |
நாராயணாத் ப்ரஜாபத்ய: ப்ரஜாயந்தே |
நாராயணாத் த்வாதஶ ஆதி3த்யாய ருத்3ரா வஸவஸ் ஸர்வாணிச
ச2ந்த3ாகும்ஸி |
நாராயணதே3வ ஸமுத்பத்யந்தே |
நாராயணே ப்ரவர்தந்தே ! நாராயணே ப்ரலீயந்தே |
- நாராயணோபனிஷத்

பரப்ரம்மமான நாராயணன் உயிர்ப் பொருள்களை ஸ்ருஷ்டி செய்யும் இச்சை கொள்கிறான். தன் ஸங்கல்பத்தாலே ப்ராணன், மனம், இந்திரியங்களையும் உண்டாக்குகிறான். ஆகாசம், வாயு, அக்னி, ஜலம், பூமி இவற்றை தோற்றுவித்து அவற்றை

ஆதாரமாக்குகிறான். நாரயணனிடமிருந்து ப்ரம்மாவும், சிவனும், இந்திரனும் பன்னிரு ஆதித்யரும், பதினொரு ருத்ரர்களும், அஷ்ட வசுக்களும் தோன்றினர். நாரயணன்தான் வேதத்தை வெளிப்படுத்தினான். எல்லா வஸ்துக்களும் அவனிடமிருந்து தோன்றி அவனிடமே லயிக்கின்றது. அவன் நாரயணன்.

16-30 *அசித்$_3$ அவிஶிஷ்டாந் ப்ரளயே*
ஜந்தூந் அவலோக்ய ஜாத நிர்வேத$_3$ா |
கரண களேப$_3$ர யோக $_3$ம்
விதரஸி வ்ருஷ ஶைலநாத$_2$ கருணே த்வம் ||
- *தயாசதகம்* 17

ப்ரளய காலத்தில் (dissolution time) அசித் போல் அமுங்கி கிடந்த பிராணிகளைக் கண்டு மனம் வருந்தி இந்திரியம், சரீரம் இவற்றின் ஸம்பந்ததை தந்தான் பகவான் தன் கருணையாலே.

16-31 *ஜீவனுக்கு சரீரம் எதற்கு தேவை?* என்னில் ப்ரளய காலத்தில் இந்த ஆத்மாகள் எல்லாம் பகவத் அனுபவமின்றி, கரை தேற வழியற்று கிடக்கிறதே என்ற வருத்தத்தினால் பகவான் அவற்றிற்கு இந்திரியங்கள், சரீரம், மனஸ், புத்தி கொடுத்ததோடு மட்டுமில்லாது கருணா மூர்த்தியான அவன் சாஸ்திரங்களை தந்து, தானே அவதரித்தும், ஆழ்வார், ஆசாரியர்களை கொடுத்தும் சேதனர்கள் உஜ்ஜீவிக்க பல வகையாலும் உதவினான். சரீரம் என்பது ஆத்மா உஜ்ஜீவிக்க ஒரு சாதனம்.

16-32 விஷமமே (mischief) செய்யும் குழந்தையை தாய் ஒருத்தி எப்படி உறங்கச் செய்தும் பின் அதன் மேல் கருணை கொண்டு அவற்றை எழுப்பி உண்ண உணவு கொடுப்பதும், மறுபடியும் தீங்கான காரியங்களை செய்யாதே என்று அறிவுரை செய்வது போலே.

16-33 *தஸேந்திரியானனம் கோரம் யோ மனோரஜநீசரம்*
விவேக ச ரஜாலேந சமம் நயதி யோகிநாம்

பத்து இந்திரியங்கள் பத்து தலை போல். மனம் என்பது அதை உடைய ராவணன் போல். அந்த மனஸ்ஸை விவேகம் என்னும் அம்பினால் அடித்து வீழ்த்தி யோகிகளைபோல் சாந்தி பெறுவாய் (மெய், வாய், கண், மூக்கு, செவி என்பது ஞான இந்திரியங்கள். வாக்கு, கை, கால், ஜலமல விஸர்ஜனேந்திரியம், ரேதோவிஸர்ஜனந்திரியம் என்பது கர்மேந்த்ரியங்கள்).

16-34 இந்த்3ரியாணி பராண்யாஹுர் இந்த்ரியேப்4ய: பரம் மந: |
மநஸஸ்து பரா பு3த்3தி4ர்யோ பு3த்3தே4: பரதஸ்து ஸ: ||
பகவத்கீதை 3-42

உடலைவிட வேறானது இந்திரியங்கள்.
இந்திரியங்களைவிட மேலானது மனம்.
மனத்தைக் காட்டிலும் மேலானது தெளிவை கொடுக்கும் புத்தி.
புத்தியைக் காட்டிலும் ப்ரதானமானது அது.
காமம் என்பது அது (எம்பெருமானார் வியாக்கியானம்)
ஆத்ம ஞானத்திற்கு அடிப்படை விரோதி இந்திரியங்கள்.
மனம் என்பது அதில் முக்கிய விரோதி.
மனதை அடக்குவது கஷ்டம். கெட்ட புத்தி தலை தூக்கும்
புத்தியை ஏதோ ஒரு வழியாய் வசப்படுத்தினால்கூட அதைவிட பெரிய ஆபத்து என்பது ஆசை.
ரஜோ குணத்தால் தூண்டப்பட காமம் எல்லாத்தையும் அழிக்கும்.

16-35 உற்றாரை கவனியாது சுற்றாரை பூஜிக்கும் உலக அனுபவம் போலே. அழியா உறவை உணராது அல்பமான சரீர சம்பந்தத்தை போற்றும் அல்பரைப் போல் இல்லாது எம்பெருமானை உணர்ந்து.

16-36 இந்த்3ரியேப்4ய பரா ஹ்யர்த2ா அர்தே2ப்4யஸ்ச பரம் மந:
மநஸஸ்து பரா பு3த்3தி4ர் பு3த்3தே4ர் ஆத்மா மஹாந் பர: |
மஹத: பரமவ்யக்தம் அவ்யக்தாத் புருஷ: பர:
புருஷாந் பரம் கிஞ்சித் ஸா காஷ்ட2ா ஸா பரா கதி: ||
கடோபனிஷத் 1-3-10&11

இந்திரியம் - மனம் - புத்தி - மஹத் என்னும் ஸ்மஷ்டி புத்தி - அவ்யக்தம் என்னும் ப்ரகிருதி இவற்றைவிட புருஷன் மேலானவன். புருஷனுக்கு மேல் எதுவும் இல்லை. அதுதான் எல்லை. அதனால் அந்த பகவானை எப்போதும் நினைக்க வேணும். அதற்கு அநுகூலமாய் இருப்பது நல்ல சேர்க்கை.

16-37 ஸத்ஸங்க3த்வே நிஸ்ஸங்க3த்வம்
நிஸ்ஸங்க3த்வே நிர்மோஹத்வம் |
நிர்மோஹத்வே நிஶ்சலதத்வம்
நிஶ்சலதத்வே ஜீவன் முக்தி: ||
பஜ கே3ாவிந்தம் பஜ கே3ாவிந்தம்

கே3ாவிந்தம் ப4ஜ மூட4மதே |
ஆதி சங்கரர், பஜகோவிந்தம் - 9

நல்ல சேர்க்கை, தவறான ஸகவாஸத்தை தவிர்க்கும். அது தவறான காமத்தை தவிர்க்கும். அது மனதை சஞ்சலம் இல்லாது ஒரு நிலையில் இருக்க உதவும். அந்த நிலையில் பகவானை அறியலாம்.

16-38 ஆத்மாநம் ரதி2நம் வித்3தி4 ஸரீரம் ரத2மேவ து |
பு3த்3தி4ம் து ஸாரதி2ம் வித்3தி4 மந: ப்ரக்3ரஹமேவ ச ||
இந்த்3ரியாணி ஹயந் ஆஹுீர் விஷயாம்ஸ்தேஷு கே3ாசராந் |
ஆத்மேந்த்3ரிய மநோயுக்தம் பே4க்தேத்யாஹுீர் மநீஷிண: ||
கடோபனிஷத் 1-3-3&4

உடல் என்பது தேர் (Body is the chariot).
ஆத்மா அதன் சொந்தக்காரன் (Soul is the owner).
புத்தி அதன் தேரோட்டி (Intelligence is the driver).
இந்திரியங்கள் தான் குதிரைகள் (organs are horses).
அல்ப விஷயங்கள் திசைகள் (Cheap stuff are directions)
மனம் என்பது கடிவாளம் (Mind is the controlling bridle).
மனத்தைக் கொண்டு குதிரைகளை அடக்கி தேரை நல்ல வழியில் திருப்பு. ஒரு ஊர் போய்சேர நல்ல ரதம், குதிரை, சரியான வழி, கடிவாளம், நல்ல தேரோட்டி வேணும். பரமபதம் போக உறுதியான உடல், புலன்கள், நல்ல வழி, புத்தி வேணும்.

16-39 உரன் என்னும் தோட்டியான் ஓர் ஐந்தும் காப்பான்
வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து
- திருக்குறள் 1-3-4

யானை போல் ஐந்து பொறிகளான ஆசைகளை, அறிவு என்னும் ஆயுதத்தால் அடக்கி ஆள்பவன், மோக்ஷம் என்னும் பேரின்ப வீட்டிற்கு விதை போன்றவன் என்றான் வள்ளுவன்.

16-40 ஆத்மா -> புத்தி -> மனம் -> இந்திரியங்கள் -> அல்ப சுகங்கள்
(கர்மா -> அஞ்ஞானம் -> வாஸனை -> ருசி -> தேஹ ஸம்பந்தம்)
ஆத்மா உரிமையாளன் ஆனாலும் புத்தியே தேரை ஓட்டுபவன். அந்த தேரோட்டி ஆத்மாவிற்கு அடங்கியவன். இந்த தேரோட்டி மனத்தைக் கொண்டுத்தான் புலன்களை அடக்க வேணும். புத்தி விவேகமில்லாது மனம் செல்லும் வழியில் போனால் அது ஜீவாத்மாவை படுகுழியில் தள்ளும்.

16-41 கால தேஸங்கள் ஸாமான்ய விரோதிகள். அவை சில சமயம்தான் ஞானத்தை கெடுக்கும். ஆனால் இந்திரியங்களோ என்றும் கெடுக்கும். தீ உயிரற்ற உடலைத்தான் கொளுத்தும். இந்திரியங்களோ உயிர் உள்ளபோதே ஆத்மாவை கொளுத்துகிறது என்றான் அருச்சுனன்.

16-42 இந்திரியங்கள் இதர விஷயங்களில் ஈடுபட்டால் ஆத்ம ஞானம் உண்டாகாது. மனம் என்னும் ப்ரதான இந்திரியம் மற்ற எல்லாத்தையும் கட்டு படுத்த வேண்டும். இந்திரிய நிக்ரஹம். மனஸ்ஸை ஒருமாதிரியாக அடக்கியிருந்தாலும் புத்தி தகாத விஷயத்தில் மனஸ்ஸும் தறி கெட்டு அலையும். புத்தியைக் காட்டிலும் காமம் கொடியது. அதைத்தான் அடக்க வேண்டும்.

16-43 *ஆவி திகைக்க ஐவர் குமைக்கும் சிற்றின்பம்*
பாவியேனை பல நீ காட்டிப் படுப்பாயோ
- திருவாய்மொழி 6-9-9

ஆத்மா திகைத்திருக்கும் அளவிற்கு என்னுடைய மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து இந்திரியங்களும் உலக இன்பத்தில் அடியேனைத் தள்ளியது. பேரின்பத்திற்கே இருக்கும் என்னை இதில் தள்ளலாமா என்று அந்த *நாயகனை* வினவினார்.

16-44 *கஜேந்த்₃ர ரக்ஷா த்வரிதம் ப₄வந்தம்*
க்₃ராஹைரிவாஹம் விஷயைர்விக்ருஷ்ட: |
அபார விஜ்ஞாந த₃யாநுப₄ாவம்
ஆப்தம் ஸதாம் அஷ்டபுஜம் ப்ரபத்₃யே
அஷ்டபுஜாஷ்டகம் 1

அன்று, கஜேந்திரனை ஒரு முதலைதான் கவ்வியது. என்னுடைய இந்திரியங்களை உலக விஷயங்கள் என்னும் பல முதலைகள் கவர்கின்றன. ஞானம், கருணை, பெருமை உடைய அஷ்டபுஜபெருமானே நீதான் என்னை காக்க வேண்டும் என்று வேண்டிய அந்த ஹிருஷிகேசன்தான் *நாயகன்*.

16-45 *பகவாந் உவாச:*
யாவந்தோ விஷய: ப்ரேஸ்ச்சதாஸ் த்ரைலோக்யம் அஜிந்திரியம்
ந ஸகுநுவந்தி தே ஸர்வ ப்ரதிபூரயத்தும் ந்ருபா
- பாகவதம் 8-19-21

இந்திரியங்களை கட்டு படுத்தாதவனுக்கு, மூன்று லோகங்களிலும் அவனுடைய இந்திரியங்களால் அனுபவித்து

பெறும் சுகத்தை திருப்தி செய்ய எந்த பொருளுமில்லை. இந்திரியங்களை அடக்க வேண்டுமே தவிர அதை எதினாலும் திருப்தி செய்ய முடியாது. அதற்காகவே வர்ணாச்ரம தர்மம் ஏற்பட்டிருக்கிறது

16-46 *அஹிம்ஸா ப்ரதமம் புஷ்பம், புஷ்பம் இந்திரிய நிக்ரஹம்*
ஸர்வ பூத தயா புஷ்பம், க்ஷமா புஷ்பம் விசேஷத:
த்யானம் புஷ்பம், தப புஷ்பம், ஞானம் புஷ்பம் ததைவஸ்ச
ஸத்யம் அஷ்டவிதம் புஷ்பம், விஷ்ணோர் ப்ரீதிகரம் பவேத்
என்று இந்திரிய நிக்ரஹத்தை பகவானுக்கும் அர்ச்சிக்கும் புஷ்பமாய் சொன்னது.

16-47 இந்திரியங்களுக்குள் மனஸ்ஸேதான் முக்கியமானதால் அதை இங்கே சொல்லுகிறாள். நாயகன் என்பதால் பகவானை, எல்லோருடைய மனஸ்ஸின் அதிபதியை, அல்பமான உலக விஷயத்தில் ஈடுபடுத்தாது, ஆத்மாவிற்கு அநுகூலமாய், ப்ராப்தமான பரம புருஷார்த்தமான பகவத்குணத்தில் ஈடுபட பகவானை நோக்கி விண்ணப்பம்.

16-48 அவன் ஒருவனே ஸர்வ நியந்தா. எல்லா வஸ்துக்களையும் நியமிப்பவன் என்பதால் பகவத் அனுபவத்திற்கு பாங்காய் நம் மனசு அமைய நாம் செய்யும் ப்ராத்தனைக்கு செவி சாய்த்து மனஸ்ஸை நமக்கு வசம் ஆகும்படி ஆக வேண்டுகிறான்.

16-49 *நந்தன்* என்பது ஆனந்தத்தை அளிப்பவன். ஆனந்தமான அவன், தன்னைப் பற்றியவருக்கு ஆனந்தத்தை அருள வல்ல அமலன். வேறு யாராலும் அந்த ஆனந்தத்தை அளிக்க முடியாது.

16-50 *யதோ வாசோ நிவர்தந்தே | அப்ராப்ய மநஸா ஸஹ |*
ஆநந்த3ம் பரஹ்மணோ வித்3வாந் | ந பி4பேதி குதஶ்ச நேதி ||
- தைத்ரீயம் ஆனந்தவல்லீ 9-1
ப்ரம்மம் என்பதே ஆனந்தமயமானது அதை அறிந்தவனுக்கு பயமில்லை என்றது. அவன் ஸ்வரூபமே ஆனந்தமயம். அதனால்தான் மற்றவருக்கு ஆனந்தம் அளிக்க முடிகிறது.

16-51 *வேத3ாபஹார கு3ரு பாதக தை3த்ய பீடாதி3*
ஆபத்3 விமோசந மஹிஷ்ட2 ப2லப்ரத3ாநை: |
கோந்ய: ப்ரஜா பஸூபதீ பரிபாதி கஸ்ய

பாதோதகேந ஸ ஶிவஸ் ஸ்வ ஶிரோ த்ருதேந ||
- ஆளவந்தார் ஸ்தோத்ர ரத்னம் 13

வேதங்களை இழந்ததும், தகப்பன் தலையை கிள்ளிய பாபம், அசுரர்களால் ஏற்பட்ட துன்பம் போன்ற ஆபத்துக்களை போக்கியதாலும், உயர்ந்த பலன்களை அளிப்பதாலும் உன்னைத்தவிர, வேறு யார் ப்ரஜாபதியான பிரமனையும், பசுபதியான சிவனையும் காக்கிறார்கள்? அந்த சிவனும் உன் பாத தீர்த்தத்தை தலையில் தரித்து பரிசுத்தமானான் அன்றோ! தானே தத்தளிப்பவன் இன்னொருவரை ஆனந்திக்க இயலுமோ?

16-52 உயர்வற உயர்நலம் உடையவன் எவன்
அவன் மயர்வறு மதிநலம் அருளினன்
- திருவாய்மொழி 1-1-1

கோபன் என்பது ரக்ஷகன். ஸகல கல்யாண குணங்களைக் கொண்ட இவன் ஒருவனே ரக்ஷகன்.

16-53 அகாரார்தே $_2$ா விஷ்ணு:
- அஷ்டஸ்லோகி 1

ரஷிக்கும் தொழிலை உடையவன் அவன். ப்ரணவத்தில் அகாரம் என்பது அவ என்ற சப்தத்திலிருந்து வந்தால் அதற்கு அர்த்தம் சொல்லுங்கால் அவரக்ஷணே என்ற தாதுவைக் கொண்டு ரக்ஷகத்தை சொல்லியது. அதனால் இவன் கோபன்.

16-54 அக்ஷராணாம் அகாரோஸ்மி
- பகவத்கீதை

என்று கண்ணனே கீதையில் தான் அகாரவாச்யன் என்பதைக் காட்டினான். அகாரம் எப்படி அக்ஷரங்களின் முதலோ அதுபோலே நான் சப்தங்கள் போற்றும் வஸ்துக்கள் எல்லாவற்றிலும் முதல்.

16-55 அகர முதல எழுத்து எல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு
- திருக்குறள் 1

அகாரத்தை கொண்டு ஆரம்பிக்கும் அக்ஷரங்கள் எல்லாம் பகவானையே சொல்லும்.

16-56 தம் த்வா ஜகத் ஸ்திதி உதயந்த ஹேதும்
ஸமம் ப்ரசந்தம் ஸுக்ருத் ஆத்ம தைவம்
- பாகவதம் 10-63-44

படைக்கும் தொழிலை பிரமனுக்கும் அழிக்கும் தொழிலை ருத்திரனுக்கும் வழங்கி, காக்கும் தொழிலை தனக்கே அசாதாரணமாகக் கொண்ட அச்சுதன்.

16-57 அரணாம் நமக்கு என்றும் ஆழி வலவன்
முரணாள் வலம் சுழிந்த மொய்ம்மன் - சரணாமேல்
ஏதுகதி ஏதுநிலை ஏதுபிறப்பு என்னாதே
ஓது கதி மாயனையே ஒர்த்து
- மூன்றாம் திருவந்தாதி 78

பகவான் ஒருவன்தான் நமக்கு அரண், ரக்ஷகன், கோபன்.

16-58 கோயில் என்பது எம்பெருமான் எழுந்தருளியுள்ள எல்லா இடங்களும். அதிலேயும் அந்தர்யாமியாய் நம் மனஸ்ஸிலே குடி கொண்ட கோவலனை நோக்கி இங்கே விண்ணப்பம்.

16-59 பனிக்கடலில் பள்ளிகோளைப் பழக விட்டு * ஓடி வந்து
என் மனக்கடலில் வாழ வல்ல மாய மணாள நம்பி *
தனிக்கடலே தனிச்சுடரே தனி உலகே என்று
உனக்கு இடமாயிருக்க * என்னை உனக்கு உரித்தாக்கினையே
- பெரியாழ்வார் திருமொழி

உனக்கே அசாதாரணமாய் உள்ள க்ஷீராப்தி, ஆதித்ய மண்டலம், பரமபதம் என்ற உயர்ந்த இடங்களை விட்டு என் மனத்தில் வந்து குடி கொண்டாயே!

16-60 மனத்துள்ளான், மாகடல் நீருள்ளான் மலராள்
தனத்துள்ளான் தண்டுழாய் மார்பன்
- மூன்றாம் திருவந்தாதி 3

என்றாற்போலே மனம் என்னும் கோயிலை இங்கே சொல்லிற்று.

16-61 மார்வம் என்பதோர் கோவிலிட்டு
மாதவன் என்பதோர் தெய்வம் நாட்டி
ஆர்வம் என்பதோர் பூவிட வல்லார்க்கு
அரவ தண்டத்தில் உய்யலுமாமே
பெரியாழ்வார் திருமொழி 4-5-3

என்னுடைய மனஸ்ஸே நீ வசிக்கும் கோயில் என்றார் பெரியாழ்வாரும்.

16-62 மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்த மோக்ஷயோ: |
பந்தாய விஷயா ஸங்கி முக்த்யை நிர் விஷயம் மந:
- ஸ்ரீவிஷ்ணு புராணம்

மனசுதான் ஸம்சாரத்திற்கும் மோஷத்திற்கும் காரணம். அல்ப சப்தாதி விஷயங்களில் ஈடுபடும் மனம் பந்தத்தை கொடுக்கும். விஷயங்களில் பற்றை அறுத்து ப்ராப்தமான விஷயத்தில் ஈடுபடும் மனம் மோக்ஷத்திற்கு காரணம். ஆக நல்லது கெட்டது இரண்டையும் செய்வது நம் மனஸ்ஸே

16-63 உத்$_3$தத$_4$ரேத்$_3$ ஆத்மனா ஆத்மானம் ந ஆத்மானம் அவஸாத$_3$யேத்
ஆத்மைவ ஹி ஆத்மனோ ப$_3$ந்து$_4$: ஆத்மைவ ரிபு: ஆத்மன:
- பகவத் கீதை 6-5

மற்ற விஷயங்களில் பற்றில்லாத மனஸ்ஸினால் ஆத்மாவை ஸம்ஸார கடலிருந்து மீட்க வேணும். மனஸ்ஸினால் தன்னைத் தானே வீழ்த்தி கொள்ளக் கூடாது. ஏனெனில் ஒருவனுக்கு அவன் மனமே பந்து. அதுவே விரோதி. மனம் மற்ற விஷயங்களில் போகாது ஆத்மாவையே நோக்க வேணும்.

16-64 அஸு^{3}ர்யா நாம் தே லோகா அந்தே ந தமஸாவ்ருதா |
தாகும்ஸ்தே ப்ரேத்யாபி$_4$ க$_3$ச்ச$_2$ந்தியே கே சாத்மஹதோ ஜநா
- ஈசோவஸ்ய உபனிஷத் 3

தானே வீழ்த்திக் கொள்வது என்ன எனில் ராகத்வேஷங்கள், காம க்ரோதங்கள், பேராசை, மோகம் என்னும் வலையில் சிக்கி இழிவான செயல்களைச் செய்து அவர்கள் நாய், பன்றி போல பிறவிகளையும் நரகம் என்னும் அசுரத்தன்மையான அஞ்ஞானத்திலும் வீழ்வார்கள். இது தற்கொலைக்கு ஒப்பு.

16-65 புலன்களால் அடக்க வேண்டியவை ஆறு
காம - ஆசை desire, passion, lust
க்ரோத - கோவம் anger, rage, violent and intense
லோப - பேராசை - greedy
மோஹ - ப்ரமம், illusioned love, attachment,
மத - வெறி cruel passion
மாத்ஸர்யம் - வெறுப்பு, பொறாமை jealous, envy, grudge

நக்ரோதா ந ச மாத்ஸார்யம் ந லோபோ ந அசுபா மதி:
பவந்தி க்ருத புண்யானாம் பக்தாநாம் புருஷோத்தமே
ஸஹஸ்ர நாமம் 120

16-66 ப$_3$ந்து$_4$: ஆத்மாஆத்மனஸ் தஸ்ய யேந ஆத்மைவ ஆத்மனாஜித: |
அநாத்மனஸ்து ஶத்ருத்வே வர்தேத ஆத்மைவ ஶத்ருவத் ||
- பகவத் கீதை 6-6

எவன் தன்னாலேயே தன் மனது ஜயிக்கப்பட்டதோ அவனுக்கு மனது பந்து. இல்லையெனில் அதுவே அவனுக்கு விரோதி. மனதை சரி செய்ய ஆரம்பம் கர்மயோகம். முறையான கர்ம யோகம் மனஸ்ஸை மற்ற ஆசைகளிலிருந்து விடுவித்து ஆத்மாவை நினைக்கச் செய்யும்.

16-67 பகவானாகிய *புருஷார்த்தத்தை* அடைய பக்தியோ இல்லை ப்ரபத்தியோ மட்டும்தான் உபாயம் (*ஹிதம்*). இந்த வழி ஏற்பட *தத்துவங்களை* அறிய வேணும். அந்த தத்துவங்களை புரிந்து கொள்ள அவசியமானது ஞானம். அந்த ஞானம் இந்திரிய ஜயத்தால் விளைவது. இந்திரிய ஜயத்திற்கு கர்ம யோகம் அடிப்படை. (*பகவான் -- பக்தி -- ஞானயோகம் -- இந்திரிய ஜயம் -- கர்ம யோகம்*)

மனத்தை கட்டுப்படுத்த முதல் படி - பற்றின்றி அவரவருக்கு விதித்த கடமையைச் செய்வது. செய்யும்போது பகவானே அவற்றை தனக்காக தானே செய்துவிக்கிறான் என்ற அறிவோடு செய்வது. *ஸ்வஸ்மை ஸ்வப்ரீதியே ஸ்வயம் ஏவ காரிதவாந்*

16-68 *கர்மண்யேவ அதி$_4$காரஸ்தே * மா ப$_2$லேஷு^{ஷ} கத$_3$ாசநா |*
*மா கர்ம ப$_2$ல ஹேதுர்பூ: * மா தே ஸங்கோ$_3$ாSஸ்த்வ கர்மணி ||*

பகவத் கீதை 2-47

ஜீவனுக்கு கர்மாவை (நித்ய, நைமித்ய, காம்ய) செய்யத்தான் அதிகாரம். பலன் என்பது பகவான் அருளுவது. அதை அறிந்தவன் அமைதியாய் இருப்பான். நம் ஸித்தாந்தத்தில் உயிர் போகும் வரை கர்மாவை செய்தே தீர வேண்டும்.

16-69 *உள்ளம் உரை செயல் * உள்ள இம்மூன்றையும் /*
*உள்ளிக் கெடுத்து * இறை உள்ளில் அடங்கே*

திருவாய்மொழி 1-2-8

கர்ம ஞான பக்தி யோகங்களை *உள்ளம், உரை, உடலால்* செய்ய வேணும். நற்செயலை ப்ரதிபலன் இல்லாதது செய்பவன், மனம் தூய்மையாகி பகவானையும் தன்னையும் அறிகிறான். அந்த பகவானை இந்த பூமியிலேயே நாம ஸங்கீர்த்தனத்தால் மகிழ்வித்து தானும் மகிழ்கிறான்.

16-70 *வீடுமின் முற்றவும் வீடு செய்து * உம் உயிர்*
வீடு உடையானிடை வீடு செய்ம்மினே

- திருவாய்மொழி 1-2-1

எம்பெருமானை பற்று. மற்றதை விடு.

16-71 *மத் கர்ம க்ருத், மத் பரமோ, மத்$_3$ ப$_4$க்த:, ஸங்க$_3$ வர்ஜித: |*
நிர்வைர: ஸர்வபூ$_4$தேஷு^{ஆ} ய:, ஸ மாமேதி பாண்ட$_3$வ: ||
- பகவத்கீதை 11-54

கர்மாக்களை என் ஆராதன ரூபமாகவும், என் பலனாகவும் கொண்டு என்னிடம் அசையாத பக்தி உடையவனாய், மற்ற பற்று அற்றவனாய், எல்லா பிராணியிடமும் பகைமை பாராதவன் என்னையே அடைகிறான்.

16-72 *பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் **
அங்காதும் சோராமே ஆள்கின்ற எம்பெருமான் /
*செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார் **
எங்கோல் வளையால் இடர் தீர்வர் ஆகாதே
- நாச்சியார் திருமொழி 1-11-3

வரம்புடைய லீலாவிபூதியும், வரம்பிலா நித்ய விபூதியும் ஒன்றையும் விடாமல் தன் வசமாகக் கொண்டு ஆளும் எம்பெருமான் உடைமை ஸர்வமும். அவனே ஆதாரம் (Support). நியந்தா (Control). ஸர்வ ஸ்வாமி (Owner).

16-73 *பிதாஸி லோகஸ்ய சரா சரஸ்ய*
த்வமஸ்ய பூஜ்யஶ்ச கு$_3$ரு$^{ர்}$ க$_3$ரீயாந் |
ந த்வத் ஸமோஸ்த்யப்யதிக: குதோந்யோ
(ந த்வத்ஸம: அபி, அஸ்தி அப்யதிக:, குத: அந்ய:)
லோகத்ரயேப்ய ப்ரதிம ப்ரபாவாந் ||
- பகவத் கீதை 11-43

அசைவன அசையாதன எல்லாவற்றிக்கும் தந்தையாகவும் உயர்ந்த குருவாகவும், துதிக்கும்படியும், இணையற்ற மஹிமையும் உடையவரே! மூவுலகிலும் உமக்கு நிகரானவர் உண்டோ! உம்மிலும் மேலானவர் இருக்க முடியுமா?

16-74 *தமீ ஶ்வராணாம் பரமம் மஹேஶ்வரம்*
தம் தேவதாநாம் பரமஞ்ச தைவதம்
- ஶ்வேதாச்வர உபனிஷத் 6-7

ஈச்வரர்களுக்கு மேலான ஸர்வேச்வரனும், தேவதைகளுக்கு மேலான தேவதையுமான ஸர்வோஜ்ஜிஷ்டமான அவன்.

16-75 *தஸ்மிந் த்$_3$ருஷ்டே பராவரே||*
- முண்டக உபனிஷத் 2-2-9

"மேலானவர்களைவிட உயர்ந்த பரமாத்மாவான அவன் பார்வை பட்டவுடன்" என்றது. சாதாரண மனிதரைவிட உயர்ந்த தேவரும் அந்த பகவான் முன்னே தாழ்ந்த அவரமே. அதனால் தான் பகவான் பரம்+அவரம் என்ற இரண்டையும் கொண்ட பராவரன்

16-76 *கதிஸ்ச நாஸ்த்வம் தேவேஷு பூர்வஜோ ஜகதத் ப்ரபு:*
ரக்ஷார்த்தம் ஸர்வ பூதாநம் விஷ்ணுத்வம் உபஜக்மிவான்

- மஹாபாரதம் உயோக பர்வம் 12-11

எல்லா தேவர்களுக்கும் முன் அவதரித்தவர் நீர். ஸர்வரையும் ரக்ஷிக்க வேண்டி விஷ்ணு எனும் ரூபத்தை கொண்டு உள்ளீர் என்றான் ப்ரம்மாவும் எம்பெருமானை நோக்கி

16-77 *கோயில் காப்பானே* - இந்த மனம் என்னும் கோயிலை ரக்ஷிப்பவனே. நீ அதை ப்ராப்தமான விஷயத்தில் ஈடுபடச் செய்து காக்க வேணும்.

16-78 *பயக்ருத் பய நாஸந:*

- விஷ்ணு ஸஹஸ்ரநாமம்

பயத்தை உண்டு பண்ணுபவனும் அவனே. அதை போக்குபவனும் அவனே. கண்ணன் முதல் அத்யாயத்திலே அருச்சுனனை கலக்கினான். கடைசி அத்யாயத்தில் என்னை ஒருவனையே சரணாக அடை என்று அவனே வழி காட்டினான்.

16-79 யுத்தத்திற்கு வந்த அருச்சுனன் தைரியவான். சுற்றத்தாரை கொல்லவும் வேண்டும் என்பதை நன்கு அறிந்தவன். அவனை வேண்டும் என்றே கலக்கியவன் கண்ணன்.

16-80 *அர்ஜுன உவாச:*
ஸேநயோர் உப$_4$யோர் மத்$_4$யே ரத$_2$ம் ஸ்த$_3$ாபய மே அச்யுதா ||
யாவத்$_3$ ஏதாந் நிரீக்ஷேஹம் யோத்$_3$து$_4$காமாந் அவஸ்தி$_2$தாந் |
கைர் மயா ஸஹ யோத்$_3$த$_4$வ்யம் அஸ்மிந் ரண ஸமுத்யமே ||

- பகவத்கீதை 1-21,22

ஹே அச்சுதா! எங்கே, எத்தனை நேரம் இரண்டு படைகள் நடுவில் நிறுத்தினால் என்னுடைய ஸஹாயர்களை பார்க்கலாமோ அப்படி *என் தேரை*க் கொண்டு நிறுத்து என்று *ஆணையிட்டான். விஜிதாத்மா* எனும் வெல்லமுடியாத பகவான் *விதேயாத்மாவாய்* தன் அடியவர் இட்ட ஆணைக்கு அடி பணிந்தான்.

16-81 ஹிருஷிகேசன் புன்சிரிப்போடு பேசி அவன் மனத்தை கலக்கினான். அருச்சுனன் குழம்பி, உடல் வலிமை இழந்து. கிருஷ்ணன் மேலும் தன் மனத்தை மாற்றிவிடுவானோ என பயந்து நடுங்கினான். உற்றார் உறவினரைக் கொன்று அந்த இரத்த அசுத்தத்தில் நாட்டை ஆள விரும்பவில்லை.

16-82 துரியோதனாதிகள் கோழை என்று அழைத்தாலும், ராஜ்யமும் சுகபோகங்களும் அமையாவிட்டாலும் காட்டில் இருந்து பிச்சை எடுத்து ஜீவிக்கிறேன் என்று முடிவு எடுத்தான் அருச்சுனன். "க்ஷத்ரிய தர்மம் போர் செய்வது. பிராமண தர்மம் பிச்சை எடுப்பது. வர்ணாச்ரம தர்மத்திற்கு விரோதமாய் செய்வது தவறு" என்று உபதேசித்தான் கண்ணன்.

16-83 *யத் ச்₂ரேய:ஸ்யாத் நிச்சிதம் ப்₃ரூஹி தந் மே |*
ஶிஷ்யஸ் தேஹம் ஶாதி₄ மாம் த்வாம் ப்ரபந்நம் ||

- பகவத்கீதை 2-7

எது மேன்மை தருமோ, நிச்சியமானதோ, அதை எனக்கு கூறுங்கள். உங்களுடைய சீடனுக்கு அறிவுரை கூறுங்கள். நான் உங்களை சரணம் அடைந்தவன் என்றான் பார்த்தன். கலங்கிய விஜயன் கண்ணனிடத்தில் அடைக்கலம் புகுந்தான்.

16-84 *அஸ்த₂ாந ஸ்நேஹ காருண்ய த₄ர்ம அதர்மாதி₄யாகுலம் |*
பார்த₂ம் ப்ரபந்நம் உத்₃தி₃ஶ்ய ஶாஸ்த்ர அவதரணம் க்ருதம் ||

- ஆளவந்தார், கீதார்த்த ஸங்கிரஹம் 6

தகாத இடத்தில் அன்பும், பரிவும் கொண்ட பார்த்தன் க்ஷத்ரிய தர்மமான போரை அதர்மம் என நினைத்து குழம்பி, தன் கலக்கத்தை தீர்க்க கோவிந்தனிடத்தில் சரண் அடைய, அவனை ஒரு சாக்காக கொண்டு (excuse) பரம சாஸ்திரமான கீதையை உலகிற்கு கொடுத்தான் கண்ணன்.

16-85 பகவானே அருச்சுனனை கலக்கினான். அவன்தான் *ரிஷிகேசன்*. பகவான் திருவுள்ளம் அருச்சுனனை வியாஜமாக கொண்டு ஸகல உபனிஷத் சாரத்தை வெளியிட வேண்டும் என்பதாலே.

16-86 *அருச்சுனனுக்கு ஏன் உபதேசிக்கணும்*? என்னில் தகுதி உடையோருக்குத்தான் உபதேசிக்க வேணும் என்றது சாஸ்திரம். யார் தகுதியானவன் (eligible candidate) என்றால் ப்ரம்ம ஞானம்,

சாஸ்திர ஞானம் இல்லையே என்று ஆகிஞ்சன்ய, அநந்யகதியாய் அடைக்கலம் அடைந்தவன்தான் அதிகாரி. அவர்களுக்கு சொல்ல வேணும். மற்றவருக்கு சொல்வதில் பலன் இல்லை.

16-87 *"ந புத்ராய சிஷ்யாய"*
தன் பிள்ளை, சீடன் தவிர மற்றவருக்கு ரஹஸ்யங்களை உபதேசிக்க கூடாது என்றது சாஸ்திரம். கலங்காத (Steadfast) வீரனை கலக்கி சிஷ்யனாய் தன் காலில் விழும்படி செய்த அவன்தான் *ஹிருஷிகேசன்*. அதற்கு வேண்டிய சந்தர்ப்பத்தை (opportunity) தானே உண்டு பண்ணினான். - *கோயில் காப்பானே*

16-88 *கொடித்தோன்றும் தோரண வாயில் காப்பனே* - கொடி கட்டி பறக்கும் உள் இந்திரியமும், தன்னிச்சையில் அலையும் வெளி இந்திரியங்களையும் சொன்னது. வாயில் என்பது கண், செவி மூக்கு போன்ற துவாரங்கள் கொண்ட புறப்புலன்கள். அவற்றை ரஷித்து நல்ல வழியில் திருப்ப வேணும்.

16-89 *அந்தர் ப$_3$ஹிர்ஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ்ஸ்தி$_2$த:*
- விஷ்ணுஸூக்தம்
புவியில் கவரப்பட்ட புலன்கள், உள்இந்திரியமான மனஸ்ஸை தூண்டுகின்றன. புலன்களால் அறியாதவரை ஆசையில்லை எனினும் மனஸ்ஸோ நினைவிலேயே மயங்குகிறது. உள்ளே, வெளியே எல்லா இடங்களிலும் பரவியுள்ள நீயே என்னை ரக்ஷிக்க வேணும்.

16-90 மனஸ்ஸிற்கு (conscious mind), அது செய்யும் காரியத்தை கொண்டு பல பேர்கள்.
மனஸ் - புத்தி - சித்தம் - அஹங்காரம்.
அலை பாய்வது *மனஸ்*. அறிவைத் தருவது *புத்தி*. ஞாபகம் கொடுத்து நிலை நிறுத்துவது *சித்தம்*. நானே என்பது *அஹங்காரம்* என்றது மாண்டூக்ய உபனிஷத்
Wavering, discrimitative knowledge, will power and past experience, ego.

16-91 *மணிக்கதவம் தாள் திறவாய்* - ஆத்ம உஜ்ஜீவனமான பகவத் அனுபவம் எனும் ஆனந்தம் மூடிக் கிடக்க. அதைப் பெறுவதற்கு

சாதகமான இந்திரியங்கள், மனஸ் என்பது உலக விஷயங்களில் புரண்டு கிடக்கின்றன. அதை மாற்றி, நீயே எமக்கு அருளி மூடிக் கிடக்கும் பகவத் அனுபவத்தை அளிக்க வேணும். இந்திரிய விரோதிகளான அல்ப விஷயத்தை அகற்ற வேணும்.

16-92 ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்தில் உத்தர க்ருத்யாதிகாரத்தில் ஸ்வாமி தேசிகன் ஸாதிப்பது "மறக்க வேண்டியதில் ப்ராதனம் விஷயாஸ்வாதம்".

16-93 ஆயர் சிறுமியரோமுக்கு ஆயர் சிறுமியர்கள் என்பதால் சேஷத்வ பாரதந்திர்யத்தை காட்டியது. பசுவுக்கு புல்லும், மனிதனுக்கு அன்னமும், தேவருக்கு அமிருதமும் போல எமக்கு உன் அனுபவமே தாரக போஷக போக்யங்கள்.

16-94 ந மாம் து$_3$ஷ்கிருதிநோ மூட$_4$ா: ப்ரபத்$_3$யந்தே நராத$_4$மா: |
மாயயா அபஹ்ருத ஜ்ஞாநா: ஆஸு$_3$ரம் ப$_4$ாவம் ஆஶ்ரிதா: ||
பகவத் கீதை 7-15

என்னை வழிபடாதவர் நால்வர். இழிவான செயல்களை செய்யும் மூடர்கள், நராதமர் எனும் மனிதரில் தாழ்ந்தவர்கள், மாயையால் ஞானம் அபகரிக்கப்பட்டவர், அசுரத்தன்மை கொண்டவர்கள். இதில் நராதமன் ஞானம் பிறந்து கெட்டவன்.

16-95 ஈச்வர தன்மை அறிந்தும், உயர்ந்த பரத்வத்தை கண்டு பயந்து அவனை அடையாதவன் பிறந்து கெட்ட நராதமன் அது போலன்றி, அந்நலமுடை ஒருவனை நணுகினோம் நாமே என்று பகவானின் ஸௌலப்யத்தினாலேயே அவனையே அடைந்த அறிவில்லாத ஆய்ச்சியர் போலே இன்று வந்தோம்.

16-96 அறைபறை - பறை என்பது பகவத் அனுபவம். பகவானின் பரத்வத்தையும் ஸௌலப்யத்தையும் அறிந்து அவனிடம் சரணாகதி செய்து எம்பெருமானனுக்கு செய்யும் கைங்கர்யமே உயர்ந்தது என்று அதையே உயர்ந்த நோக்காக இப்பூமியிலேயே செய்வது.

16-97 மாயன் என்பதாலே பரத்துவத்தை சொன்னது. பூலோகத்தில் ப்ரகிருதியால் விளையும் அஜ்ஞானத்தை விலக்கி விபரீத

வாசனை ஒழித்து எம்பெருமானை ஆத்மார்த்தமாக அனுபவிக்க செய்யும் ஸாமர்த்யம் உடையவன் மாயன்.

16-98 *மணி வண்ணன்* என்பதாலே பரத்துவத்தின் ஸௌலப்யத்தை சொன்னது. ஸாமர்த்யமான மாயன், சந்தேகம் இன்றி நமக்கு கருணை புரிவான் என்பதைக் காட்டுகிறது மணி வண்ணன்.

16-99 பிரகிருதியை பகவான் தனக்கு வசமாய் வைத்துள்ளான். தன் அடியவர்களின் அஞ்ஞானத்தை விலக்கி அவரவர் ப்ராகிருத சரீரத்துடன் உலக விஷயங்கள் பகவத் அனுபவத்தில் தடையிடாது அவனை அனுபவிக்க அருள் பொழியும் ஸமர்த்தன் *மாயன் மணி வண்ணன்*.

16-100 *நென்னலே வாய் நேர்ந்தான்* சாஸ்திரத்தின் மூலமாய் அன்று நீயே இதைச் சொன்னது. தன்னை சரணாகதி அடைந்தவர்களை அப்போதே ரக்ஷிக்கிறேன் என்பதே.

16-101 உயிர் உள்ளவரை நிரபராத கைங்கர்யத்தை வேண்டுபவருக்கு அருளுவாய் என வந்தோம். ப்ரபத்தி செய்யுங்கால், மோஷத்தை மட்டும் வேண்டி இதை மறந்தவர்கள் செய்யும் புநர் ப்ரபத்தி. கேட்டதையே கேட்காது, கேட்க மறந்த உன் அனுபவத்தை வேண்டுகிறோம் நீ சொன்ன சொல் தவறாதவன் என்பதால் நீ சொன்னபடியே உன்னையே வந்து ப்ராத்திக்கிறோம்.

16-102 *தூயோமாய் வந்தோம்* - தூய்மை என்பது புறத் தூய்மையுடன் (external) அகத்தூய்மையும் (internal purity). அகத்தூய்மை என்பது அநந்யகதித்வம், அநந்யப்ரயோஜனத்வம்.

16-103 *துயில் எழ பாடுவோம்* - உன்னை நாங்கள் ஸ்தோத்திரம் செய்ய நீயும் கேட்க வேண்டும். பட்ட பகலிலே அரண்மனையில் உன்னை ஸ்துதி செய்து வேறு பொருளை யாசித்து பெற்றுப் போவர் போலன்றி உன்னை பாடுவது உனக்கு அலங்காரம் செய்வது, உன்னிடம் சேர்ந்தே இருப்பதையே *ஸ்வயம் ப்ரயோஜனமாய்* வேண்டி, விடியற்காலையில் வந்தோம்.

16-104 *வாயால் முன்னம் முன்னம் மாற்றதே* - உன் அனுபவத்தை கொடுக்காமல் செய்யாதே. முன்னே சொன்னதை, சொன்ன வார்த்தையை மீறாதே. *"ராமோ த்3விர்நாபி4 ப4ாஷதே"*

16-105 *நேய நிலைக் கதவம்* - நேசம் என்றால் அன்பு, நட்பு, பக்தி. நிலையான நேசம் என்பது இடைவிடாது நிரந்தரமாய் இருக்கும் பக்தி. நிலைக்கதவு போல தடை உள்ள விஷயானுபவத்தை நீக்கி உன்மேல் ஸ்திரமான பக்தியை உண்டாக்கு.

16-106 விஷம் உண்டால் கெடுக்கும். விஷயமோ நினைக்கையிலே கெடுக்கும். பகவத் விஷயத்தில் ஈடுபட்டவனுக்கும் மற்றவை இனிக்காது. பற்றுகை, விடுகைக்கு காரணம். பகவத் விஷயம் என்பது உலக விஷயத்தை அகற்றுவது. இரண்டும் மாறி நிற்பது, inversely related. ஆயினும் பற்றுகை, விடுகை இரண்டிற்கும் உன் அருளே காரணம். ஆதலால் அதையே வேண்டி வந்தோம்.

16-107 *யாவாந் அர்த2 உத3பாநே ஸர்வத: ஸம்ப்லுதோத3கே*
தாவாந் ஸர்வேஷு வேதே3ஷு ப்3ராஹ்மணஸ்ய விஜாநத:
- பகவத்கீதை 2-46

ஒரு சிறுநீர்தேக்கத்தில் ஒருவனுக்கு என்ன பயன் கிடைக்கும், எல்லா இடங்களிலும் பரந்த நீர்நிலையைக் கண்டபின்? அந்த பலன்தான் கிடைக்கும் அனைத்து வேதத்தினாலும், ப்ரம்மத்தை தத்வரீதியாக அறிந்தவனுக்கு. வேதம் பலவற்றை சொன்னாலும் அதனுள் மோஷோபாயத்தையே நோக்க வேணும்

16-108 *அஸந்துஷ்டோ த்விஜோ நஷ்ட:*ஸந்துஷ்டி என்பது திருப்தி. அது இல்லாதவன் ப்ராம்மண்யம் இழக்கிறான் என்றது சாஸ்திரம். உலக வஸ்துக்களில் திருப்தி ஏற்பட மனஸ்தான் காரணம். அதை சரி செய்ய எம்பெருமானை நோக்கி இங்கே வேண்டுகிறாள்.
எந்த காரியத்திற்கும் 5 காரணங்கள் - *தேஹம், ஜீவாத்மா, இந்திரியங்கள், ப்ராணன், பரமாத்மா* என்றான் கண்ணன் கீதையில். ஆனால் எல்லாச் செயல்களுக்கும் ஆரம்ப கர்த்தா பகவானே, ஜீவன் இல்லை.
"தேந விநா த்ருணமி ஜலதி" மற்றும் *"அவனன்றி அணும் அசையாது"* என்கிறாற்போலே.
அதனாலே ஆரம்ப கர்த்தாவான அந்த எம்பெருமானிடமேயே மனத்தை சரி செய்ய வேண்டுகிறாள்.